பண்டித ஜவஹர்லால் நேரு வேளாண் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம்,

காரைக்கால் & இந்திய வானிலைத்துறை

காரைக்கால் மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை

(10.04.2024 முதல் 14.04.2024 வரை)

தொ. எண் (அலுவலகம்): 04368 – 261182

E-mail: agronaas2012@gmail.com தொ. நகல் (அலுவலகம்): 04368-261260

அறிக்கை எண்: 029 (04) PJN/GKMS/2024 தேதி: 09.04.2024

## காரைக்கால் மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை

| கடந்த வார வானிலை (04.04.2024 முதல் 08.04.2024 வரை) | | | | | வானிலை காரணிகள் | அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலை முன்னறிவிப்பு -14.04.2024 – 8.30 மணி நேரம் வரை | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 04/04 | 05/04 | 06/04 | 07/04 | 08/04 | | நாள்-1 10/04 | நாள்-2 11/04 | நாள்-3 12/04 | நாள்-4 13/04 | நாள்-5 14/04 |
| 0 | 0 | 0 | 0 | 0 | மழை (மி.மீ) | 0 | 0 | 2 | 2 | 0 |
| 36 | 37 | 39 | 39 | 37 | அதிகபட்ச வெப்பநிலை (டி.செ) | 35 | 34 | 34 | 34 | 34 |
| 27 | 26 | 25 | 25 | 26 | குறைந்தபட்ச வெப்பநிலை (டி.செ) | 27 | 27 | 26 | 27 | 26 |
| 2 | 2 | 2 | 1 | 4 | மேக மூட்டம் | 3 | 4 | 6 | 5 | 6 |
| 60-87 | 57-92 | 48-89 | 58-7 | 56-92 | ஈரப்பதம் (%) | 50-70 | 50-80 | 60-80 | 50-80 | 50-80 |
| 6 | 4 | 4 | 4 | 4 | காற்றின் வேகம் (கி.மீ) | 16 | 16 | 16 | 18 | 18 |
| மேற்கு வட மேற்கு | மேற்கு வட மேற்கு | மேற்கு வட மேற்கு | மேற்கு வட மேற்கு | தெற்கு தென் மேற்கு | காற்றின் திசை | கிழக்கு | கிழக்கு தென் கிழக்கு | கிழக்கு தென் கிழக்கு | கிழக்கு தென் கிழக்கு | கிழக்கு தென் கிழக்கு |

**எதிர்பார்க்கப்படும் வானிலை (10.04.2024 முதல் 14.04.2024 வரை):**

- ஏப்ரல் 12 மற்றும் 13 தேதிகளில் லேசான தூறல் எதிர்பார்க்கப்படுகிறது.

அடுத்த ஐந்து நாட்களுக்கு வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். வெப்ப நிலை 26-35 டி.செ, மாலை மற்றும் காலை நேர காற்றின் ஈரப்பதம் 50-80 சதவிகிதமாகவும், காற்றின் வேகம் 16-18 கி.மீ அளவுக்கு பதிவாக வாய்ப்புள்ளது. காற்றானது பெரும்பாலும் கிழக்கு தென் கிழக்கு திசையிலிருந்து வீசக்கூடும்.

ஏப்ரல் 14 லிருந்து 20 வரை மழை (1.82 மி.மீ), அதிகபட்ச வெப்பநிலை (34.78 டி.செ) மற்றும் குறைந்தபட்ச வெப்பநிலை (24.70 டி.செ) இயல்பாக இருப்பதற்கு வாய்ப்புள்ளது.

## வேளாண் அறிவுரை

| பயிர்கள் / கால் நடைகள் | பருவம்/ விவரங்கள் | வேளாண் ஆலோசனைகள் |
|---|---|---|
| உளுந்து மற்றும் பச்சை பயிர் | பூக்கும் மற்றும் காய்க்கும் பருவம் | உளுந்து பயிரில் சாம்பல் நோயைக் கட்டுப்படுத்த லிட்டருக்கு கார்பன்டசிம் 1 கிராம் அல்லது ப்ரோப்பிகானசொல் 1 மி.லி என்ற அளவில் பயன்படுத்தவும். |
| | இலை சுருள்வு நோய் | உளுந்து மற்றும் பச்சை பயிரில் இலை சுருள்வு நோயைப் பரப்பும் வெள்ளை ஈக்களைக் கட்டுப்படுத்த ஒரு லிட்டர் நீரில் 0.2 கிராம் தையாமீத்தாக்சம் (25 WG) கலந்த கரைசலை பயன்படுத்தவும். |

| | | |
|---|---|---|
| பருத்தி | பயிர் வளர்ச்சி பருவம் | பருத்தியில் களையைக் கட்டுப்படுத்த ஹெக்டருக்கு பயிரிதியோபக் சோடியம் (pyrithiobac sodium) 62.5 கிராம் a.i. + குயிசலோபாப் ஈதைல் (quizalofop ethyl) 50 கிராம் a.i களைக்கொல்லிகளை விதைத்த 20-25 வது நாட்களில் பயன்படுத்தவும். |
| கத்தரி | இலைப் புள்ளி மற்றும் பழம் அழுகல் நோய் | கத்தரியில் இலைப்புள்ளி மற்றும் பழம் அழுகல் நோயைக் கட்டுப்படுத்த சூடோமோனாஸ் ஃபுளோரசன்ஸ் (Pseudomonas fluorescens) அல்லது பேசில்லஸ் சப்டிலிஸ் (Bacillus Subtilis) ஒரு லிட்டர் நீரில் 5 கிராம் அல்லது 5 மி.லி கலந்த கரைசலை உடனடியாக தெளிக்க வேண்டும். |
| கால்நடை | உண்ணி காய்ச்சல் | கால்நடைகளில் ஒட்டுண்ணியால் உண்ணி காய்ச்சல் நோய் ஏற்பட அதிக வாய்ப்புள்ளது. இந்நோயைத் தடுக்க உண்ணியைக் கட்டுப்படுத்த பூட்டாக்ஸ் என்ற மருந்தை 1 லிட்டருக்கு 2 மில்லி என்ற அளவில் கலந்து தெளிக்கவேண்டும். மாடுகளை இம்மருந்து கொண்டு குளிப்பாட்டலாம். கால்நடைக் கொட்டகைக்கு அருகாமையிலுள்ள இடங்களிலும் இம்மருந்தினை தெளிக்கவேண்டும். |

**குறுஞ்செய்தி:** ஏப்ரல் 12 மற்றும் 13 தேதிகளில் லேசான தூறல் எதிர்பார்க்கப்படுகிறது.

**முதல்வர்**